3.	ரூ. 500,001.00 - இருந்து 1000,000.00	5,000.00
4.	ரூ. 1000,000.00 இற்கு மேற்பட்ட	10,000.00

அட்டவணை - III

சுற்றாடல் பாதிப்புகளை இனங்காணுவது குறித்தான வினாத் தொடர்	100.00
சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர விண்ணப்பப் படிவம்	100.00
சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பதுப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம்	50.00
சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரக் கட்டணம்	4000.00

12- 460/8

அம்பலாங்கொடை நகர சபை

முச்சக்கர வண்டிகளைத் தரித்து வைப்பதற்கான அனுமதிக் கட்டணம் - 2022

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 153 ஆவது மற்றும் 157 ஆவது சரத்தின் கீழ் அம்பலாங்கொடை நகர சபையினால் அமைக்கப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கங் கொண்ட மாகாண சபை (ஏற்புடைய ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது சரத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற் கூறப்பட்ட நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது சரத்தினால் தம்மிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தென் மாகாண சபைச் சட்டம் மற்றும் சமாதான, கல்வி, பெருந் தெருக்கள், உள்ளூராட்சி, செய்தி, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றாடல் விவகார விடயப் பொறுப்பு அமைச்சரால் அனுமதிக்கப்பட்டுள்ள இடைச் சட்டத்திற்கு அமைய தவிசாளரினால் அல்லது செயலாளரால் உரிய கருமத்துக்காக வெளியிடப்படும் செல்லுபடியான அனுமதிப் பத்திரத்தை தமது கையிருப்பில் வைத்திருக்கும் பட்சத்திலன்றி எவரொருவராலும் நகர சபையினால் விதிக்கப்பட்டிருக்கும் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கும் இடத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கக் கூடாததுடன் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணமாக 1000 ரூபா அறவிடுவதற்கு 2021, திசெம்பர் 07 ஆந் திகதி இடம்பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் இலக்கம் 05.1.1 ஐக் கொண்ட முன்மொழிவின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

மணிமெல் வடு அருண பிரதீப்,
தவிசாளர்,
அம்பலாங்கொடை நகர சபை.

அம்பலாங்கொடை நகர சபை ,
அம்பலாங்கொடை,
2021, திசெம்பர் 07.

12-460/9

அம்பலாங்கொடை நகர சபை

களியாட்ட வரியை விதித்தல் - 2022

1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்ட வரிச் சட்டத்தின் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் சரத்தின் மற்றும் பிரசித்தியில் நடித்துக் காட்டுதல் கட்டளைச் சட்டத்தின் 176 ஆவது அதிகாரத்தின் 3 ஆவது சரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, 2021 ஆம் ஆண்டுக்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வரியை விதிப்பதற்கும் 2019.11.05 ஆம் திகதிய 5.1.1 ஐக் கொண்ட சபை இணக்கத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்வரும் வரிச் சதவீதத்தை விடயப் பொறுப்பு அமைச்சரால் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் இவ் வரி விதித்தல் மீளத் திருத்தம் செய்யப்படும் வரை செல்லுபடியாகும் எனவும் 2021, திசெம்பர் 01 ஆந் திகதி இடம்பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் 05.1.1 இலக்கத்தைக் கொண்ட முன்மொழிவினால் தீர்மானம் எடுக்கப்பட்டதைப் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.

மணிமெல் வடு அருண பிரதீப்,
தவிசாளர்,
அம்பலாங்கொடை நகர சபை.

அம்பலாங்கொடை நகர சபை ,
அம்பலாங்கொடை,
2021, திசெம்பர் 07.

அட்டவணை

அம்பலாங்கொடை நகர சபையின் நிர்வாக எல்லையினுள் அமைந்துள்ள பிரதேசத்தில் நடத்தப்படும் ஏதேனுமொரு களியாட்ட நிகழ்விற்கான கட்டணம்

திரையரங்குகளிலிருந்து	-	10% உம்
ஏனைய களியட்ட நிகழ்வுகளிலிருந்து	-	25 % உம் அறவிடப்பட்டதாக இத்தால் அறியத் தரப்படுகிறது.

கவனிக்குக .- களியாட்ட வரியின் சதவீதத்தைத் திருத்தம் செய்வதற்கு விடயப்பொறுப்பு அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட வரிச்சதவீதம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

12 - 460/10

கொட்டபொல பிரதேச சபை

விளம்பரங்களுக்கான அறிவித்தல் /கட்புலனாகும் சூழல் வரி - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (I) இன் கீழ், கீழ் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஏ. ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின், 149 ஆம் பிரிவின் படி வாசிக்கப்பட்டதும் குறித்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் (ஆ) அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி கொட்டபொல பிரதேச சபை சரத்தின் அல்லது கீழ் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அதி விஷேட வர்தமானி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதியை 2007.11.30 ஆந் திகதிய சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதன் துணைவிதியின் இடையாப்பு 39 ஆம் அத்தியாயத்தின் கீழ் கொட்டபொல பிரதேச சபை எல்லைக்குள் ஏதாவது நபர் ஒருவரினால் பிரதான வீதிக்கு, ஓடைக்கு, நதிக்கு, வாவிக்கு அல்லது வானத்திற்கு காட்சிப்படுத்தும் விதத்தில் காணப்படும் விளம்பர அறிவித்தல்களுக்காக காட்சிப்படுத்தப்படும் (பெனர் உட்பட) அமைப்புகள் மற்றும் அறிவித்தல்களுக்காக கீழ்காணும் அட்டவணையில் I ஆம் நிரலில் குறித்திருக்கும் ஏதாவது விளம்பரங்கள் தொடர்பாக II ஆம் நிரலில் குறித்திருக்கும் எல்லைக்குட்பட்ட தொகையை உத்தரவுப்பத்திர கட்டணத்தை உரிய வருடத்திற்கென விதித்து அறவிடப்படவென கொட்டபொல பிரதேச சபை கருத்துத் தெரிவித்துள்ளது.

அட்டவணை

	விளம்பர விபரங்கள்	
தொ. இல.	I ஆம் நிரல்	II ஆம் நிரல்
1.	விளம்பரப்படுத்தப்பட்ட அறிவித்தல்கள் தொடர்பாக	ரூ. 100.00
2.	விளம்பரப்படுத்தப்படும் பெனர் கட்டவுட் ஒன்று தொடர்பாக	ரூ.75.00
3.	சுவரில் வரையப்படும் அறிவித்தல் தொடர்பாக	ரூ.100.00
4.	டிஜிடல் மற்றும் எல்.ஈ.டி. மின் குமில்களினால் செயல்படும் அறிவித்தல் பலகைகள் மூலம் ஒவ்வொரு வியாபர அறிவித்தல்களுக்கும் ஒரு நாளைக்கு	ரூ. 20.00

12-461/1

கொட்டபொல பிரதேச சபை

ஏக்கர் வரி அறவிடல் - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (II) இன் கீழ், கீழ் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஏ. ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின்.-

(அ) 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கொட்டபொல பிரதேச சபையின் வளுப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏக்கர் வரிக்கு உட்பட்ட அனைத்து காணிக்கும் 2021 ஆம் வருடத்தில் வலுப்படுத்தப்படும் பெறுமதியை 2021 ஆம் வருடத்தின் பெறுமதியாக ஏற்றுக் கொண்டு

(ஆ) 134 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அதன் உப பிரிவின் முதலாம் பிரிவின் கீழ் 1989.03.10 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட நியதியின்படி ஏக்கர் வரியை விதித்தல், அறவிடல்

தொடர்பான செயற்பாடானது உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் விஷேட பிரதேசங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஹெக்டயார் 1 இக்கு குறையாததும், எனினும் ஹெக்டயார் 5 இக்கு குறைந்த அனைத்துக் காணிகளுக்கும் ரூபா ஐம்பது (50.00) விகிதாசாரப்படி ஏக்கர் வரியை மற்றும் ஹெக்டயார் 5 இக்கு அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து நிரந்தர வதிவுச் சொத்துக்களிலிருந்தும் அனைத்து ஹெக்டயார்களுக்கும் ரூபா பத்து (10.00) ஆக ஏக்கர் வரியை 2022 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்படவும்;

(ஆ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உரிய வரியை முறைப்படி 2021, மார்ச் மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களிலோ அல்லது அதற்கு முன்னரோ சமமான நான்கு தவணைகளாக பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென வரிக்குட்பட்ட அனைத்து நபர்கள் மீதும் அறவித்தல் வீடுக்க கொட்டபொல பிரதேச சபையில் தீர்மானித்துள்ளது.

12-461/2

கொட்டபொல பிரதேச சபை

உத்தரவுப்பத்திரக் கட்டணம் விதித்தல் -2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (III) இன் கீழ், கீழ் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஏ. ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் படி வாசிக்கப்பட்டதும் குறித்த பிரிவின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கொட்டபொல பிரதேச சபை வளுப் பிரதேசத்தில் இங்கு கீழே அட்டவணையில் (I) ஆம் நிரலில் குறித்த ஒவ்வொரு கைத்தொழில்களும் 2022 ஆம் வருடத்தில் நடத்தப்படுவது தொடர்பாக வழங்கப்படும் ஏதாவது உத்தரவுப்பத்திரம் மீது அக் கைத்தொழில் நடாத்தப்படுவது தொடர்பாக வழங்கப்படும் ஏதாவது உத்தரவுப் பத்திரம் மீது அக் கைத்தொழில் நடத்தப்படும் நிலையத்தின் வருடாந்த பெறுமதியை அதே அட்டவணையின் II நிரலுக்கு நேரொத்த நிரலில் குறித்த தொகையை உத்தரவுப்பத்திர கட்டணமாக விதித்து அறவிடப்படவெனவும், அதற்கு மேலதிகமாக உத்தரவுப்பத்திர கட்டணத்தில் 15 % தொகையை முத்திரை கட்டணமாக அறவிடப்படவென கொட்டபொல பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

அட்டவணை

நிரல் I	நிரல் II		
தொ. இல.	வியாபாரம் அல்லது தொழில் விபரம்	தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)	
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை	1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
01.	விடுதியொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
02.	ஹோட்டல் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

நிரல் I		*நிரல் II*		
தொ. இல.	*வியாபாரம் அல்லது தொழில் விபரம்*	*தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
03.	சாப்பாட்டுக் கடையொன்று அல்லது போசணசாலை /கோயில் கடை ஒன்றை வைத்திருத்தல்	500.00	750.00	1000.00
04.	பேக்கரி நிலையமொன்றை வைத்திருத்தல்	500.00	750.00	1000.00
05.	இனிப்புப் பண்டங்கள் சமைத்த உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல்	500.00	750.00	1000.00
06.	பால் பண்ணை பால் உற்பத்தி வியாபார நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
07.	மீன் விற்பனை நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
08.	இறைச்சி விற்பனை நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
09.	சலவை நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
10.	தனியார் வியாபார சந்தை நடாத்துதல்			
11.	முடிவெட்டும் நிலையம் நடாத்துதல்/முடி சரி செய்யும் சலூன் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
12.	குளிர்பானம், யோகட், ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
13.	இறைச்சி அறுக்கும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
14.	நடமாடும் வியாபார நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
15.	உல்லாச பிரயாண சபையால் அனுமதிக்கப்பட்ட ஹோட்டல் சிற்றுண்டிச்சாலை/தங்குமிடம் ரெஸ்டுரண்ட்	கடந்த வருட வருமானத்தில் 1 % உத்தரவுக் கட்டணம் விதித்தல்		

12-461/3

கொட்டபொல பிரதேச சபை

கைத்தொழில்களுக்கான வரி அறவிடல் - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (IV) *இன் கீழ், கீழ் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

ஏ. ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின், *150* ஆம் பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் பிகாரம்.

(அ) கொட்டபொல பிரதேச சபையின் வலுப்பிரதேசத்தினுள் *2022* ஆம் வருடத்தில் நடத்தப்பட்டு வரும் கீழே அட்டவணையில் நிரல் இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கைத்தொழில்கள் தொடர்பாக அக் கைத்தொழில் நடாத்தப்படும் வளாகத்தின் வருடாந்த பெறுமதி அதே அட்டவணையின் நிரல் இலக்கம் II இற்கு நேரொத்த தொகையை கைத்தொழில் வரியாக *2022* ஆம் வருடத்திற்கு விதிக்கப்பட்டு அறவிடப்படவும்,

(ஆ) *2021* ஆம் வருடத்தின் திசெம்பர் மாதத்தின் *31* ஆந் திகதி வரை நடாத்தப்பட்டு வரும் ஏதாவது கைத்தொழில் தொடர்பாக குறித்த வரியை *2022*, யூன் மாதம் *30* ஆந் திகதிக்கு முன் கைத்தொழிலை நடத்துபவரினால் கொட்டபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென இதன் மூலம் அறியத்தருவதோடு,

(இ) *2022* ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் ஏதாவது கைத்தொழிலாக இருக்குமிடத்து உரிய வரியை, கைத்தொழிலினை ஆரம்பித்த மூன்று மாதங்களுக்குள் கைத்தொழிலினை நடத்துபவரினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென கொட்டபொல பிரதேச சபை இதன் மூலம் அறிவித்தல் விடப்பட்டுள்ளது.

அட்டவணை

நிரல் I		*நிரல் II*		
தொ. இல.	*வியாபாரம் அல்லது தொழில் விபரம்*	*தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை*	*1,500 ரூபாவிற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்*
		ரூபா ச.	*ரூபா ச.*	*ரூபா ச.*
01.	சுண்ணாம்பு சுடுதல் அலலது களஞ்சியப்படுத்தல் நிலையமொன்று வைத்திருத்தல்	*500.00*	*750.00*	*1000.00*
02.	பிளாஸ்டிக் பைபர், கண்ணாடி சாமான்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்	*500.00*	*750.00*	*1000.00*
03.	பாக்கு, காய்ச்சி தயாரிக்கும் நிலையம் நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
04.	பாணி உற்பத்தி செய்தல் கருப்பட்டி உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
05.	சாதாரண ஆலையொன்று வைத்திருத்தல்	*500.00*	*750.00*	*1000.00*
06.	பப்படம் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
07.	கருவா எண்ணெய், பகிரி எண்ணெய் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்			
08.	விற்பனைக்காக மனித வலுவைக் கொண்டு கருங்கற்களை உடைக்கும் ஆலை ஒன்று வைத்திருத்தல்	*500.00*	*750.00*	*1000.00*
09.	விற்பனைக்காக காளான் உற்பத்தி நிலையமொன்றை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
10.	தச்சு ஆலையொன்று நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
11.	கற்குழியொன்று நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
12.	சுண்ணாம்பு ஆலை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
13.	புகையிலை தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல்	*500.00*	*750.00*	*1000.00*
14.	மிருகப்பண்ணை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
15.	கோழிப் பண்ணை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
16.	கொப்பரா உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
17.	மோட்டார் வாகன இலக்கத்தகடு தயாரிக்கும் நிலையம் நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

நிரல் I		*நிரல் II*		
தொ. இல.	*வியாபாரம் அல்லது தொழில் விபரம்*	*தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
18.	தேயிலப் பெட்டி பலகைப் பெட்டி தயாரிக்கும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
19.	வீட்டுப் பொருட்கள் உற்பத்தி செய்தல் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
20.	பத்தி உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
21.	துணி அலங்கார அச்சகமொன்று நடாத்துதல்	500.00	750.00	1000.00
22.	விற்பனைக்காக பல் வகையிலான பயிர் தவான் நடாத்துதல்	500.00	750.00	1000.00
23.	விசித்திர பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
24.	காதித உறை தயாரித்தல்	500.00	750.00	1000.00
25.	தும்பு, கால் துடைப்பு, விளக்குமாறு உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலுமான நிலையமொன்று வைத்திருத்தல்	500.00	750.00	1000.00
26.	விற்பனைக்காக மணல் கரைப்படுத்தல்	500.00	750.00	1000.00
27.	அமில வகைகள் உற்பத்தி செய்யும் விற்பனை நிலையமொன்ற நடாத்துதல்	500.00	750.00	1000.00
28.	படங்கள் சட்டமிடும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
29.	களியாட்ட பூமிகளில் தற்காலிக வியாபார நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
30.	பற்றரி சாஜ் பண்ணும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
31.	விசித்திர கலை வரைதல் நிலையம்	500.00	750.00	1000.00
32.	பலவித உலோகங்கள் பூசப்படும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
33	செங்கல் தயாரிக்கும் சூளையிடும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00

12-461/4

கொட்டபொல பிரதேச சபை

வியாபார வரி அறவிடுதல் - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (V) இன் கீழ், கீழ் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஏ.ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவுகளின்

(அ) (1) ஆம் உட்பிரிவின் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கொட்டபொல பிரதேச சபை வலுப் பிரதேசத்திற்குள் இங்கு கீழே அட்டவணையின் 02 இல் குறித்த ஏதாவது வியாபாரம் 2022 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்டு வரும் அனைத்து நபர் மீதும் குறித்த வியாபாரத்தின் 2021 ஆம் வருட வருமானம் அட்டவணையின் 01 இல் I ஆம் நிரலில் குறித்த ஏதாவது எல்லைக்கு உட்பட்டு நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் II ஆம் நிரலுக்கு நேரொத்த நிரலில் குறித்த தொகையை வரியாக விதித்து அறவிடப்படவும் மற்றும்

(ஆ) 03 ஆவது உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி வரிக்குட்பட்ட ஒவ்வொரு நபரிடமிருந்தும் உரிய வரியை 2022 ஆம் வருடத்தின் யூன் மாதத்தின் 30 ஆம் திகதிக்கு முன் பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென கொட்டபொல பிரதேச சபை தீர்மானித்ததாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

அட்டவணை

தொ. இல.	I ஆம் நிரல் வருடத்திற்கான வியாபாரத்தின் தன்மை	II ஆம் நிரல் செலுத்த வேண்டிய வருடாந்த வரி ரூபா ச.
1.	ரூபா 6,000.00 க்கு மேற்படாத சந்தர்ப்பம்	இல்லை
2.	ரூபா 6,000.00 தொடக்கம் ரூபா 12,000.00 வரை	90.00
3.	ரூபா 12,000.00 தொடக்கம் ரூபா 18,750.00 வரை	180.00
4.	ரூபா 18,750.00 தொடக்கம் ரூபா 75,000.00 வரை	360.00
5.	ரூபா 75,000.00 தொடக்கம் ரூபா 1,50,000.00 வரை	1,200.00
6.	ரூபா 1,50,000.00 மேற்பட்ட சந்தர்ப்பத்தில்	3,000.00

01. செங்கல் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
02. ஓடுகள் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
03. விறகு விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
04. விற்பனைக்காக சுண்ணாம்பு/சுண்ணாம்புக் கற்கள் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
05. விற்பனைக்காக பத்திரிகை/காகிதாதிகள் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
06. விற்பனைக்காக மிருக உணவு தொன் 01 க்கு மேல் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
07. விற்பனைக்காக சீமெந்து களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
08. வீட்டுத் தளபாடங்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
09. விற்பனைக்காக தேயிலை 03 அந்தர் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
10. கணினிகளும் கணினி உதிரிப்பாகங்களும் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
11. கொமினிகேசன் (தொலைபேசி சேவை பெற்றுக் கொள்ளும்) நிலையம் நடாத்துதல்
12. வாழைக்குலை/பாக்கு சேர்க்கும் நிலையம் நடாத்துதல்
13. பூஜைப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
14. தலைக்கு பூசும் எண்ணெய் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
15. உடற் பயிற்சி செய்யும் நிலையம் நடாத்துதல்
16. உபதேச சேவை வழங்கும் நிலையம் நடாத்துதல்
17. சாப்பு சாமான்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
18. மின்சார உபகரணம் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
19. ஒலி பெருக்கி குத்தகைக்கு விடும் நிலையம் நடாத்துதல்
20. தொலைக்காட்சி/தொலைபேசி/தையல் இயந்திரம் /மிதிவண்டிகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
21. ஆடைகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
22. தோல் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
23. அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்

24. கொண்டாட்டப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
25. தையல் இயந்திர முகாமை நிறுவனம் நடாத்துதல்
26. புத்தகக் கடை வைத்திருத்தல்
27. மோட்டார் வாகன/மோட்டார் சைக்கிள்/டெக்டர்/சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையம் நடத்துதல்
28. காகிதாதிகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
29. கண்ணாடி, கண்ணாடிப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
30. ஆயுர்வேத வைத்தியம் மருந்து விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
31. மேற்கத்திய வைத்தியம், மருந்து விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
32. ஆயுர்வேத வைத்தியம் பார்க்கும் நிலையம் நடாத்துதல்
33. மேற்கத்திய வைத்தியம் பார்க்கும் நிலையம் நடாத்துதல்
34. மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்
35. மலர்ச்சாலைப் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
36. வெற்றிலை விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
37. தைத்த ஆடைகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
38. மோட்டார் வாகனம் /மோட்டார் சைக்கிள்/டெக்டர் /பைசிகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
39. படப்பிரதி செய்யும் நிலையம் நடாத்துதல்
40. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
41. நாடாக்கள் பதிவு செய்தல், வில்லைகள் பதிவு செய்தல் நிலையம் நடாத்துதல்
42. சங்கீதம் பதிவு செய்தல், ரொகோட்பார் நிலையம் நடாத்துதல்
43. லொத்தர் சீட்டிழுப்பு நிலையமொன்று நடாத்துதல்
44. கணினி பயிற்சி நிலையமொன்று நடாத்துதல்
45. விற்பனைக்காக தேங்காய் ஓலை களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
46. தேயிலைக் கொழுந்துகளை ஒன்று சேரத்து களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்துதல்
47. சஞ்சிகைகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
48. அனுமதிக்கப்பட்ட ரேஸ் பந்தய நிலையம் நடாத்துதல்
49. இரும்புச் சாமான்கள்/நீர் குழாய்/பித்தளை உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
50. கருவா/மிளகாய்/இறப்பர் ஏயை தேசிய பொருட்கள் கொள்வனவு செய்யும் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
51. பராலை, கிளிக்கப்பட்ட மரப்பலகைகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
52. மின் உற்பத்தி உபகரணம் மற்றும் மின் உபகரணங்கள் குத்தகைக்கு விடும் நிலையம் நடாத்துதல்
53. பீங்கான் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
54. மொத்த விற்பனை நிலையமும் சிகரட் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
55. சீமெந்து பொருட்கள் கொங்கிரீட் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
56. பிளாஸ்டிக் பொருட்கள் பெயர்ப்பலகை விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
57. சில்லறை சாமான்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
58. செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
59. டயர், டியுப் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
60. கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையமொன்று நடாத்துதல்
61. வைத்தியர்கள் சேவை புரியும் நிலையமொன்று நடாத்துதல்
62. தொலைபேசி முற்பண காட் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
63. சாயம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
64. கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
65. நிதி நிறுவனமொன்று நடாத்தல்
66. பாதணிகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
67. ஆபரணங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
68. கல், மண் செங்கல் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
69. காப்புறுதி சேவை முகாமை நிறுவனம் நடாத்துதல்
70. வைத்திய இரசாயன அறை நடாத்துதல்
71. மதுபானம் பியர் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
72. உரம் பசளை விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
72. இயந்திர இயக்க அச்சகம் நடாத்துதல்
74. அசிட் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்

75. விவசாய இரசாயண பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
76. தீ வேடிக்கை பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
77. கேஸ் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
78. மின் ஒளிபரப்புக் கோபுரம் நடாத்துதல்
79. உராய்வு நீக்கிகள் நிரப்பும் நிலையம் நடாத்துதல்
80. தேயிலைக் கைத்தொழில் நிலையம் நடாத்துதல்
81. சொகுசு வியாபார நிலையம் நடாத்துதல்
82. சோதிட சேவை நிலையம் நடாத்துதல்
83. கட்டட நிர்மாண நிலையம் நடாத்துதல்
84. மர ஆலை நடாத்துதல்
85. கற்கழி நடாத்துதல்
86. சேவையாளர்கள் 25க்கு மேல் உள்ள புடவைக் கைத்தொழிலகம் நடாத்துதல்
87. குளிர்பானம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
88. டயர், டியுப் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
89. பீங்கான், கடோல், குளியலறை தொகுதி விற்பனை நிலையம் நடாத்துதல்
90. அமைப்பு முயற்சிகள் நடத்தும் நிறுவனம் நடாத்துதல்
91. விசித்திர பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
92. விசித்திர ஆபரணங்கள் விற்பனை நிலையம் நடாத்துதல்
93. திரைச் சீலை தைத்தல்
94. முகாமை தபால் அலுவலகம் நடாத்துதல்
95. கையடக்க தொலைபேசி உதிரிப்பாகங்கள் விற்கும் நிலையம் நடாத்துதல்
96. சிறுவர் உடை மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
97. வாகனங்களினால் வெளியேறும் புகை பரிசோதனை நிலையம் நடாத்துதல்
98. வீதி அமைப்புக்களுக்கான கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்
99. மிளகாய், உப்பு வேறு அழுக்கடையும் உணவு வகைகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
100. குடிநீர் போத்தல்களுக்கு அடைத்து விற்கும் நிலையம் நடாத்துதல்
101. சரக்குப் பொருட்கள், அரிசி, சீனி, பால்மா சில்லறை விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
102. சரக்குப் பொருட்கள் அரிசி, சீனி, பால்மா மொத்த விற்பனை நிலையம் நடாத்துதல்
103. சாரதி பயிற்சி நிலையம் நடாத்துதல்
104. தனியார் கல்வி நிலையமொன்று நடாத்துதல்
105. விற்பனைக்காக உணவுப் பொருட்கள் பக்கட் பண்ணும் நிலையம் நடாத்துதல்
106. அரிசி ஆலையொன்று வைத்திருத்தல்
107. தேயிலைப் பக்கட் பண்ணும் நிலையம் நடாத்துதல்
108. வேல்டின் வேலைத் தளம் நடாத்துதல்
109. சரக்கு வகைகள்/தானிய வகைகள்/மா/மிளகாய்த்தூள் குத்தும் ஆலையொன்று வைத்திருத்தல்
110. குளிரூட்டப்பட்ட மீன்/இறைச்சி விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
111. தேங்காய் எண்ணெய் ஆலையொன்று வைத்திருத்தல்
112. கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செய்யும் நிலையமொன்று வைத்திருத்தல்
113. தச்சு வேலை தொடர்பாக உருக்கு ஆலையொன்று நடாத்துதல்
114. பல் பிடுங்கும், நிரப்பும் வைத்திய நிலையம் நடாத்துதல்
115. மோட்டார் வண்டி, முச்சக்கர வண்டி சர்விஸ் பார்க்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்
116. பழங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல்
117. குளிருட்டப்பட்ட யோகட், குடிபானங்கள், ஐஸ்கிரீம் பக்கட் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்
118. மரக்கறி விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
119. நடமாடும் பேக்கரி பொருட்கள் சில்லறையாக விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்
120. பலவகையான இயந்திரங்கள் பாவணைக்கு கொண்ட தச்சு வேலைத்தளமொன்று நடாத்துதல்
121. மிதிவண்டி பழுது பார்க்கும் நிலையமொன்று வைத்திருத்தல்
122. மோட்டார் வண்டி, முச்சக்கர வண்டி, கைஇயந்திர வண்டி பழுது பார்க்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்
123. டயர், டியூப் வொல்கனைஸ் பண்ணும் நிலையம் நடாத்துதல்
124. தங்க நகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்
125. படப்பிடிப்பு படப் பிரதி நிலையம் நடாத்துதல்

126. ஒலிபெருக்கி, தொலைக்காட்சி, தையல் இயந்திரம் அனைத்து மின்சார உபகரணங்களும் பழுது பார்க்கும் நிலையமொன்று நடாத்துதல்
127. கைக்கடிகாரங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்று நடாத்துதல்
128. சப்பாத்து குடை பழுது பார்க்கும் நிலையம் நடாத்துதல்
129. குசன் வேலைத் தளம் நடாத்துதல்
130. சரக்கு வகைகள்/தானிய வகைகள்/மா/மிளகாய்தூள் பக்கட் செய்து விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல்
131. கிரில் கேட் இரும்பு வானே பூவெட்டும் நிலையமொன்று வைத்திருத்தல்
132. சிகை அலங்கார நிலையம் நடாத்துதல்
134. கையடக்கத் தொலைபேசி பழுது பார்க்கும் நிலையம் நடாத்துதல்
135. தங்கம், வெள்ளி, உலோகப் பொருட்கள் பூசப்படும் நிலையம் நடாத்துதல்
136. குளிரூட்டி, அதி குளிரூட்டி மற்றும் வாயு சமநிலைப்படுத்துதல் பழுது பார்க்கும் நிலையம் நடாத்துதல்
137. மோட்டார் வாகன மின்சார கைத்தொழில் நிலையம் நடாத்துதல்
138. உடைகள் தைக்கும் நிலையம் நடாத்துதல்
139. வானே உருக்கு ஆலை நடாத்துதல்
140. வாகனங்களின் அதிகுளிரூட்டி தொகுதிகளை பழுது பார்க்கும் நிலையம் நடாத்துதல்
141. தனியார் முன்பள்ளி மற்றும் குழந்தை பாராமரிப்பு நிலையம் நடாத்துதல்
142. இலங்கை மின்சார சபையில் கொந்திராத் முறையில் மரங்களை வெட்டி அகற்றுதல்
143. மருந்துஎண்ணெய் வகைகள் தயாரித்தல்
144. அடைக்கப்பட்ட பொருட்கள் போக்குவரத்து செய்தல்
145. தனியார் மின்வலு நிலையம் நடாத்துதல்
146. தங்கம், வெள்ளி உலோகப் பொருட்கள் அடகு பிடிக்கும் நிலையம் நடத்துதல்
147. கொந்திராத் முறைக்கு சேவை வழங்கும் நிலையம் நடத்துதல்
148. குத்தகை முறைக்கு கூலிக்கு வாகனம் வழங்கும் வியாபார நிலையம் நடாத்துதல்
149. தொலை தூர முறையில் வியாபார முயற்சிகள் நடாத்துதல்
150. சேதனப் பசளை/சேதன எண்ணெய் வகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்துதல்

12-461/5

கொட்டபொல பிரதேச சபை

வேறு கட்டணங்கள் அறவிடல் - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (vi) இன் கீழ், கீழ்க் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஏ. பீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கொட்டபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டடுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள வேறு கட்டணங்களை 2022, சனவரி 1 ஆந் திகதி தொடக்கம் விதித்து அறவிடப்படுவதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

அட்டவணை

தொ. இல.	I ஆம் நிரல் விபரம்	II ஆம் நிரல் கட்டணம் ரூ. ச.
01.	ஏ.ரீ. படிவம் (ஒப்பினை சாராம்ச படிவம்)	150.00
02.	கட்டிடங்களுக்கான விண்ணப்பக் கட்டணம்	500.00
03.	விபத்திற்குட்பட்ட மரங்களை அகற்றும் விண்ணப்பக் கட்டணம்	
	● பலா மரத்திற்கு	1000.00
	● வேறு மரங்களுக்கு	500.00
04.	கட்டிட விண்ணப்பப்பத்திரத்திற்கு திறமைச் சான்றிதழ் பெற	
	● வணிக நிலையங்களுக்கு	1000.00
	● வதிவு நிலையங்களுக்கு	500.00
05.	கட்டிட விண்ணப்பப்பத்திரங்களின் காலத்தை நீடிக்க ஒரு வருடத்திற்கு	1000.00
06.	வரிமதிப்பு சான்றிதழ் கட்டணம்	250.00
07.	நீர் சான்றிதழ் கட்டணம்	250.00
08.	வீதி ரேகா மற்றும் எடுத்துக்கொள்ளப்படாத சான்றிதழ் தொடர்பாக	500.00
09.	வீதியில் நடமாடும் கால் நடைகளுக்கு (ஒரு கால் நடைக்கு)	500.00
10.	காணி துண்டாக்கல் விண்ணப்பம் தொடர்பான கட்டணம்	300.00
11.	காணி வரைபடத்தை அனுமதிப்பதற்காக ஒரு காணித் துண்டு தொடர்பான கட்டணம்	500.00
12.	காணிகளை துண்டாக்கியதன் பின்னர் காணி வரைபடத்தை அனுமதிப்பதற்கான கட்டணம்	
	சதுர அடி 150 - 300 வரை	500.00
	சதுர அடி 301- 600 வரை	400.00
	சதுர அடி 601- 900 வரை	300.00
	சதுர அடி 900 க்கு மேல்	200.00
13.	அலுவலக ஆவணங்களின் பிரதிகள் பெற்றுக்கொள்ளல்	250.00
14.	சபைக்குரிய நிலங்களை ஊக்குவிப்பு முயற்சிகளுக்கு பெற்றுக் கொடுத்தல் (ஒரு நாளைக்கு)	1000.00
15.	சபைக்குரிய மண்டபங்கள் உட்பட பிரதான கேட்போர் கூடத்தை குத்தகைக்கு விடல் (ஒரு நாளைக்கு)	5000.00
16.	கேட்போர் கூடத்திற்காக சபையின் பயிற்சியாளர்களின் உதவியைப் பெற (ஒரு நாளைக்கு)	1500.00
17.	கைத்தொழில் தொடர்பாக அறவிடப்படும் ஆவணங்களுக்கான மற்றும் நலன்புரி சேவைக் கட்டணம்	
	சமூக சங்கங்களினால் நடாத்தப்படும் தைத்தொழில்கள் தொடர்பாக	1000.00
	கொந்தராத்காரர்களினால் நடாத்தப்படும் கைத்தொழில்கள் தொடர்பாக	2000.00
18.	தகன அறை சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக	
	வலுப் பிரதேசத்தில் வதியும் நிரந்தர வதிவாளரின் மரணம் ஒன்றினை தகனம் செய்வதற்கு	7000.00
	வலுப் பிரதேசம் அல்லாத பிரதேசத்தில் வதியும் நிரந்தர வதிவாளரின் மரணம் ஒன்றை தகனம் செய்தல்	7500.00
19.	கொட்டபொல பிரதேச சபையில் வானங்கள் குத்தகைக்கு விடும் வழங்குதல் தொடர்பாக கட்டணம் அறவிடல் 2022 ஆம் வருடம்	-
20.	பெகோ இயந்திரம் குத்தகைக்கு வழங்கல் ஒரு மணி நேரத்திற்கு	2200.00
21.	நிலம் தகர்க்கும் இயந்திரம் குத்தகைக்கு வழங்கள் ஒரு நாளைக்கு	8000.00
22.	HF2299 டிபர் வாகனத்தை -200 கி. மீ. ஒரு நாளைக்கு (அதிகரிக்கப்படும் ஒவ்வொரு கி. மீ. தூரத்துக்கும் ரூபா 50.00 ஆக)	8000.00
23.	LL7071 டிரம்ப் டிபர் வாகனத்தை - 200 கி. மீ. ஒரு நாளைக்கு (அதிகரிக்கப்படும் ஒவ்வொரு கி. மீ. தூரத்துக்கும் ரூபா 50.00 ஆக)	1000.00
24.	நீர்பவுசர் குத்தகைக்கு விடல் (ஒரு நாளைக்கு மாத்திரம் குத்தகைக்கு விடல்)	2000.00
25.	நீர்பவுசர் குத்தகைக்கு விடல் (டிடக்டர் இன்ஜின் உட்பட நீர் நிரப்பி வலுப் பிரதேசத்திற்கு ஒப்படைக்க)	4000.00
26.	நீர்பவுசர் குத்தகைக்கு விடல் (டிடக்டர் இன்ஜின் உட்பட நீர் நிரப்பி வலுப் பிரதேசத்திற்கு வெளியே ஒப்படைக்க)	5000.00
27.	நீர்பவுசர் குத்தகைக்கு விடல் (டிடக்டர் இன்ஜின் உட்பட நீர் நிரப்பி ஒரு நாள் பூராக நீர் வழங்கல் சேவைக்காக	6000.00
28.	டிரக்டர் குத்தகைக்கு விடல் இன்ஜின் மாத்திரம் ஒரு நாளைக்கு	4000.00
29.	டிரக்டர் குத்தகைக்கு விடல் டேலர் உட்பட ஒரு நாளைக்கு	6000.00

கொட்டபொல பிரதேச சபை

கழிவகற்றல் சேவைக் கட்டணம் அறவிடல் - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (vii) *இன் கீழ், கீழ்க் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

ஏ. ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

2022 ஆம் வருடம் தொடர்பாக கழிவகற்றல் கட்டணம் அறவிடல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவு மற்றும் 126 ix *(ஆ) உட்பிரிவின் பிரகாரம் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் படி கொட்டபொல பிரதேச சபையினால் 2007.11.30 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க துணைவிதியின் படி (04) ஆம் பிரிவிற்கிணங்க கழிவகற்றல் சேவை மூலம் சேவை வழங்கும் ஏதாவது நிலையத்தின் வதிவாளர் /வியாபாரி என்பவருக்கு கீழே குறிப்பிடப்பட்ட விதத்தில் கழிவகற்றல் கட்டணமொன்று கொட்டபொல பிரதேச சபைக்கு 2022 ஆம் வருடத்தின் சனவரி மாதம் தொடக்கம் மாதாந்தம் விதித்து அறவிடப்படவென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

தொ. இல.	*விபரம்*	*கட்டணம் ரூ. சி.*
01.	*சர்விஸ் சென்டர் /கராஜ் ஒன்றிற்காக*	*ரூபா 500.00*
02.	*ஹோட்டல் /சிற்றுண்டிச்சாலை /முடி வெட்டும் நிலையம்*	*ரூபா 300.00*
03.	*பழங்கள் /மரக்கறிக் கடை*	*ரூபா 400.00*
04.	*வேறு வியாபாரங்களுக்கு*	*ரூபா 200.00*
05.	*வீடுகளுக்கு*	*ரூபா 100.00*

12 - 461/7

கொட்டபொல பிரதேச சபை

வரிமதிப்பு வரி அறவிடல் - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (vii) *இன் கீழ், கீழ்க் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

ஏ. ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

(அ) 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கொட்டபொல பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து நிரந்தர வதிவுச் சொத்துக்களிலிருந்தும் 2021 ஆம் வருடத்திற்கு அறவிடப்பட்ட வரிப் பெறுமதியை 2022 ஆம் வருடத்திற்கும் விதித்து ஏற்றுக்கொள்வதற்கும்,

(ஆ) 134 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி கிடைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கொட்டபொல பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தினுள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து நிரந்தர வதிவுச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்த பெறுமதியாக ஏற்றுக் கொண்டு அப் பெறுமதியில் நூற்றுக்கு 6% வீதத்தினை வரிமதிப்பு வரியாக 2022 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்படவெனவும்,

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வருடாந்த வரியை ஒழுங்கு முறைப்படி 2022, மார்ச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களிலோ அல்லது அதற்கு முன்னரோ சமமான 04 தவணைகளாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென வரிக்குட்பட்ட அனைத்து நபர்களுக்கும் அறிவித்தல் விடுக்கவென கொட்டபொல பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

12-461/8

கொட்டபொல பிரதேச சபை

களியாட்ட வரிக் கட்டணம் அறவிடல் - 2022

கொட்டபொல பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05:1:3 (ix) இன் கீழ், கீழ்க் குறித்த கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஏ. ஜீ. தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல,
2021, ஒற்றோபர் 28.

தீர்மானம்

களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் குறித்த அரங்கேற்றல் நாடகக் கண்காட்சி தொடர்பாக விற்பனை செய்யப்பட்ட சீட்டுக்களின் மொத்த பெறுமதியில் நூற்றுக்கு 10% தொகையை களியாட்ட வரியாக கொட்டபொல பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

12 - 461/9

மினிப்பே பிரதேச சபை

வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரி விதித்தல் - 2022

மினிப்பே பிரதேச சபை 2021, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நடாத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 05 - 02 ஆம் இலக்க முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

2022 ஆம் வருடத்துக்கென விதிக்கப்படும் குறித்த வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரியை 2022 ஆம் வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்திவிடுமாறு மேலும் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. எம். எஸ். பி. அபேசிங்ஹ,
தவிசாளர் ,
மினிப்பே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மினிப்பே,
2021, நவெம்பர் 26.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், குறித்த சட்டத்தினால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது துணை விதிகளின் கீழ் அல்லது குறித்த சட்டத்தின் 150 ஆவது பிரிவின் படி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறவோ அல்லது வரிக் கொடுப்பனவு செய்யவோ தேவையில்லாத வர்த்தகங்கள் அல்லது தொழில் தொடர்பாக, மினிப்பே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 2022 ஆம் வருடத்தில் நடாத்திச் செல்லும் ஒவ்வொருவரும் குறித்த வர்த்தகத்தில் அதற்கு முன்னைய வருடத்தின் பெறுகைகளின் மீது பின்வரும் அட்டவணையின் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படும் சந்தர்ப்பத்தில் அதன் II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குச் சமமான வியாபார வரியொன்றை 2022 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடுவதற்கும், குறித்த வரிக்கு உட்படுபவர் அவ்வரியை 2022 ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் மினிப்பே பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்திவிடுமாறும் பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை

நிரல் I வருடத்திற்கான வியாபார வருமானம்	நிரல் II செலுத்தத் தக்க வரி ரூபா ச.
1. ரூ. 6,000 வரை	இல்லை
2. ரூ. 6,001 இற்கு மேல் 12,000 இற்கு மேற்படாத தொகைக்கு	90.00
3. ரூ. 12,001 இற்கு மேல் 18,750 இற்கு மேற்படாத தொகைக்கு	180.00
4. ரூ. 18,751 இற்கு மேல் 75,000 இற்கு மேற்படாத தொகைக்கு	360.00
5. ரூ. 75,001 இற்கு மேல் 1,50,000 இற்கு மேற்படாத தொகைக்கு	1200.00
6. ரூ. 1,50,000 இற்கு மேலான தொகைக்கு	3000.00

மினிப்பே பிரதேச சபை

ஏதும் வர்த்தகங்களுக்கான துணைவிதிகளின் கீழ்
வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் மீது வரி விதித்தல் - 2022

மினிப்பே பிரதேச சபை 2021, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நடாத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 05 - 03 ஆம் இலக்க முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

2022 ஆம் வருடத்துக்கென விதிக்கப்படும் குறித்த வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரியை 2022 ஆம் வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்திவிடுமாறு மேலும் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. எம். எஸ். பி. அபேசிங்ஹ,
தவிசாளர் ,
மினிப்பே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மினிப்பே,
2021, நவெம்பர் 26.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கக்கூடிய 149 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அல்லது மினிப்பே பிரதேச சபையின் மூலம் ஆக்கப்பட்ட அல்லது மினிப்பே பிரதேச சபை ஏற்றுக்கொண்ட ஏதும் துணை விதிகளின் கீழ் மினிப்பே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நடாத்தப்படும் பின்வரும் அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் தொழில் முயற்சிகள் தொடர்பில் நிரல் II இல் காட்டப்பட்டுள்ளதன் அடிப்படையில் 2022 ஆம் வருடத்துக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விதித்து அறவிடுவதற்கும்,

குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகம் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹோட்டல், தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல் அல்லது தங்குமிடமாக இருப்பின், அவ்வாறான ஹோட்டல், தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல் அல்லது தங்குமிடம், கடந்த வருடத்தின் பெறுகைகளின் ஒரு சதவீதம் (1%) அல்லது அட்டவணை நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணம் ஆகிய இரண்டில் மிகக் குறைந்த தொகைக்குச் சமமான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விதித்து அறவிடுவதற்கு மினிப்பே பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை

நிரல் I		நிரல் II		
தொ. இல.	வியாபாரம் அல்லது தொழில் விபரம்	தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை ரூபா ச.	1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச.
1.	பேக்கரி	500.00	750.00	1000.00
2.	ஹோட்டல் மற்றும் தங்குமிட விடுதி	500.00	500.00	1000.00
3.	சலவை நிலையம்	500.00	750.00	1000.00
4.	முச்சக்கர வண்டிகள் திருத்தும் அல்லது சேர்விஸ் செய்யும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

நிரல் I		*நிரல் II*		
தொ. இல.	*வியாபாரம் அல்லது தொழில் விபரம்*	*தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
5.	உலோகக் கடைசல் வேலைத்தளம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
6.	யோகற் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யுமிடம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
7.	சிகையலங்கார நிலையம் முடி திருத்துதல் சலூன்	500.00	750.00	1000.00
8.	தங்குமிடம் அல்லது விருந்தினர் விடுதி நடாத்துதல்	500.00	750.00	1000.00
9.	கண்ணாடி தொடர்பான பொருட்கள் விற்பனை நிலையம் நடாத்துதல்	300.00	500.00	1000.00
10.	திரிந்து சென்று விற்பனை செய்யும் தொழில் நடாத்துதல்	500.00	750.00	1000.00
11.	ஐரோப்பிய மருந்தகம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
12.	பாதணிகள் விற்பனை நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
13.	பல் கட்டும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
14.	பாணி, கருப்பட்டி தயாரித்தல்	500.00	750.00	1000.00
15.	உரம் அல்லது இரசாயன உர உற்பத்தி, மற்றும் உரம் களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளுதல்	500.00	750.00	1000.00
16.	கால்நடை வளர்ப்பு (இறைச்சி, பால், முட்டைக்காக)	500.00	750.00	1000.00
17.	புகைப்பட நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1000.00
18.	மிருக வைத்திய நிலையம் நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
19.	விற்பனைக்காகப் பழுதடையக்கூடிய உணவு வகைகள் அல்லது உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்தல்	500.00	750.00	1000.00
20.	கருவாடு, உப்பு மீன், அல்லது ஜாடி கிலோ கிராம் 150 இற்கு மேல் வைத்திருத்தல்	500.00	750.00	1000.00
21.	சிரட்டை கரி அல்லது மரக் கரி உற்பத்தி களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளுதல்	500.00	750.00	1000.00
22.	கால்நடைகளுக்கான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்	500.00	750.00	1000.00
23.	புண்ணாக்கு உற்பத்தி அல்லது 200 கிலோவிற்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்	500.00	750.00	1000.00
24.	சவர்க்காரம் உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00
25.	புதிய அல்லது பழைய உலோகம் களஞ்சியப்படுத்தி வைத்தல்	500.00	750.00	1000.00
26.	பழைய உலோகப் பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைத்தல்	500.00	750.00	1000.00
27.	வீட்டு தளபாடங்களை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளுதல்	500.00	750.00	1000.00
28.	பிரம்பினாலான பொருட்கள் உற்பத்தி	500.00	750.00	1000.00
29.	தச்சு தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
30.	பழச்சாறு அல்லது பழப் பானங்கள் உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00
31.	இனிப்புப் பண்டங்களை உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00
32.	தூரிகை வகை உற்பத்தி செய்தல் (பல்தூரிகை தவிர்ந்த)	500.00	750.00	1000.00
33.	பற்தூரிகை உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00
34.	வினாகிரி உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்	500.00	750.00	1000.00
35.	பொறிமுறை அல்லது கைவினை மர ஆலை நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
36.	பெயின்ட், வார்ணிஷ், சாயம் அல்லது 100 லீற்றர்க்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்	500.00	750.00	1000.00
37.	பழவகை அல்லது மீன் மற்றும் உணவு வகையை டின்களில் அடைத்தல்	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* *வியாபாரம் அல்லது தொழில் விபரம்*	*நிரல் II* *தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் *ரூபா ச.*	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* *ரூபா ச.*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* *ரூபா ச.*
38.	*மிளகு, கோப்பி, தானிய வகைகளை, வாசனை திரவியங்களையும் மற்றும் மா அரைத்தல் அல்லது அரைக்கும் ஆலை ஒன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
39.	*உடைகள் கழுவும் நீலத் திரவம் தயாரித்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
40.	*அவமங்கலச் சேவைகள் மலர்ச்சாலை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
41.	*வாசனை திரவியங்கள் உற்பத்தி மற்றும் களஞ்சியசாலை ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
42.	*டயர் அல்லது டியூப் 50 ஐ விட கூடுதலான அளவு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
43.	*டயர் மீள் நிரப்புதல்*	*500.00*	*750.00*	*1000.00*
44.	*டயர், டியூப் வொல்கனைசு செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
45.	*சீமெந்து கிலோ கிராம் 1,000 க்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
46.	*சீமெந்துப் பொருட்கள் அல்லது எஸ்பெஸ்டாஸ் சீமெந்து பொருட்கள் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
47.	*பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
48.	*விசைத்தறி ஆடை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
49.	*உரம், சுண்ணாம்பு, வேறு பொருட்கள் கொண்டு வந்த சாக்குகளை சுத்தப்படுத்தி விற்பனை செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
50.	*இயந்திரம் மூலம் சீமெந்து அச்சுக்கல் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
51.	*தானியங்களை 250 கிலோகிரம் இற்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
52.	*மொத்த வியாபாரத்திற்காக மா, வெங்காயம், மற்றும் சீனி, கிலோ கிராம் 750க்கு மேலாக வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
53.	*தைத்த ஆடைகளை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
54.	*அச்சகம் ஒன்று நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
55.	*கோழிகள் 100க்கு அதிகமாக உள்ள பண்ணை ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
56.	*ஆடுகள், பன்றிகள் 10க்கு அதிகமாக வளர்த்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
57.	*செங்கல் அல்லது ஓடு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
58.	*விறகுக் களஞ்சியம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
59.	*பொறிமுறை அல்லது கைகளால் கருங்கல் உடைக்கும் ஆலை நடத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
60.	*குளிர்பானம் தயாரித்தல், அல்லது குளிர்பான போத்தல் 100 க்கு அதிகமாக வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
61.	*ஐஸ்கிரீம் உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
62.	*தேங்காய் எண்ணெய் உற்பத்தி அல்லது 300 லீற்றருக்கு அதிகம் வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
63.	*தும்பு அல்லது நார்களைப் பயன்படுத்திப் பொருட்கள் உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* *வியாபாரம் அல்லது தொழில் விபரம்*	*நிரல் II* *தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் *ரூபா ச.*	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* *ரூபா ச.*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* *ரூபா ச.*
64.	*பாவித்த ஆடைகளை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
65.	*தங்க நகைகள் உற்பத்தி அல்லது புதுப்பிக்கும் தொழிலில் ஈடுபடுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
66.	*இயந்திரம் மூலம் மரம் அறுத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
67.	*பொறிமுறைப் பட்டறை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
68.	*வெற்று சாக்கு அல்லது போத்தல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
69.	*மிதிவண்டி அல்லது மோட்டார் சைக்கிள் திருத்தும் வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
70.	*பாவித்த கடதாசி அல்லது புதினத்தாள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
71.	*விசிறல் பெயின்டிங் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
72.	*தேங்காய் எண்ணெய் தவிர்ந்த காய்கறி எண்ணெய்கள் 50 லீற்றருக்கு மேலாக வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
73.	*குளிரூட்டப்பட்ட இறைச்சி அல்லது மீன் களஞ்சியப்படுத்தி வைத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
74.	*மரப்பலகை களஞ்சியப்படுத்தி வைத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
75.	*உலர் சலவை செய்தல் அல்லது நிறமூட்டுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
76.	*துணி அச்சிடுதல் அல்லது வாயமூட்டுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
77.	*பற்றரி மின்னேற்றம் செய்தல் அல்லது புதுப்பித்தல் போன்ற இடம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
78.	*மோட்டார் வாகனம் புதுப்பிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
79.	*மோட்டார் வாகன சேர்விஸ் நிலையம் நடத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
80.	*கடைசல் பட்டறை ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
81.	*தகர வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
82.	*வாயு சிலிண்டர் களஞ்சியம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
83.	*ஆயுர்வேத மருந்து, உள்நாட்டுமருந்துவகை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
84.	*கண்ணாடி பொருட்கள் மற்றும் கண்ணாடி சீட் களஞ்சியம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
85.	*கிலோகிராம் 150 அதிகமாக தேயிலைத்தூள் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
86.	*வேல்டிங் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
87.	*கடைசல் பட்டறை ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
88.	*விவசாய இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
89.	*குளிரூட்டும் இயந்திரம், குளிர்ச்சாதனம் மற்றும் அதிகுளிரூட்டி, புதுப்பித்தல் அல்லது துப்பரவு செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
90.	*மின்சார வேலைத்தளம் ஒன்று அல்லது மின்சார உபகரணம் உற்பத்தி அல்லது புதுப்பித்தல் அல்லது வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
91.	*பால் குளிரூட்டும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*

மினிப்பே பிரதேச சபை

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2022

மினிப்பே பிரதேச சபை 2021, ஒற்றோபர் 21 ஆந் திகதி நடாத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 05 - 04 ஆம் இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டுக்கென விதிக்கப்படும் மேற்குறித்த மதிப்பீட்டு வரியை 2022, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் நான்கு சமமான காலாண்டுகளுக்குள் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

2022 ஆம் வருடத்துக்குரிய மதிப்பீட்டு வரி முழுவதையும் 2022, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்குமான உரிய மதிப்பீட்டு வரியைக் குறித்த காலாண்டின் முதலாவது மாதத்தின் கடைசித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீதம் கழிவாகவும் வழங்கப்படும்.

ஏ. எம். எஸ். பி. அபேசிங்ஹ,
தவிசாளர் ,
மினிப்பே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மினிப்பே,
2021, நவெம்பர் 26.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மினிப்பே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் விருத்தியடைந்த பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களுக்குள் அமைந்துள்ள வீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் வீட்டுத் தொடர்கள் மீதும் 2018 ஆம் வருடம் செயலில் இருந்த ஆண்டுப் பெறுமதியை 2022 ஆம் ஆண்டின் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதெனவும்,

குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (1) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மேற்குறித்த ஆண்டுப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு (6%) வீதத்தை மதிப்பீட்டு வரியாக 2022 ஆண்டுக்கென விதித்து அறவிடவும்,

குறித்த மதிப்பீட்டு வரியை மேற்காட்டிய சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (6) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குள் சமமான தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென விதிப்பதற்கும், குறித்த வருடத்துக்குரிய மதிப்பீட்டு வரி முழுவதையும் 2022 சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்குமான உரிய மதிப்பீட்டு வரியைக் குறித்த காலாண்டின் முதலாவது மாதத்தின் கடைசித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீதம் கழிவாகவும் வழங்கப்படும் என மினிப்பே பிரதேச சபை முன்மொழிகின்றது.

மினிப்பே பிரதேச சபை

தண்ணீர்க் கட்டணம் அறவிடுதல் - 2022

மினிப்பே பிரதேச சபை 2021, ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி நடாத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 05 - 07 ஆம் இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

ஏ. எம். எஸ். பி. அபேசிங்ஹ,
தவிசாளர் ,
மினிப்பே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மினிப்பே,
2021, நவெம்பர் 26.

தீர்மானம்

இங்கு கீழே தரப்படுகின்ற அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்களை 2021 ஆம் ஆண்டில் விதித்து அறவிடுவ-தென மினிப்பே பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை

நீர்க் கட்டணம் அறவிடுதல்

வதிவிட நீர் வழங்கல்கள்	**ரூ. ச.**
நிலையான கட்டணம்	100.00
நீர்மானி இல்லாத நுகர்வு இடங்களுக்கானது	50.00
நீர்மானி உள்ள இடங்களுக்கானது	**ரூ. ச.**
1-10 அலகுகள்	3.00
11-15 அலகுகள்	4.00
16-30 அலகுகள்	5.00
31-45 அலகுகள்	6.00
46-70 அலகுகள்	7.00
71-100 அலகுகள்	8.00
101-125 அலகுகள்	9.00
126-150 அலகுகள்	10.00
151 இற்கு மேல்	11.00
வர்த்தக நிலைய நீர் வழங்கல்கள்	
நிலையான கட்டணம்	200.00
நீர்மானி இல்லாத நுகர்வு இடங்களுக்கானது	200.00
நீர்மானி உள்ள இடங்களுக்கானது	
1-10 அலகுகள்	5.00
11-35 அலகுகள்	6.00
36-75 அலகுகள்	7.00

76-100 அலகுகள்	9.00
101-125 அலகுகள்	11.00
126-150 அலகுகள்	12.00
151 இற்கு மேல்	13.00

புண்ணியத் தலங்களுக்கானது

நிலையான கட்டணம்	100.00
1-25 அலகுகள்	விநியோகம் இலவசம்
26-100 அலகுகள்	2.50
101-150 அலகுகள்	3.00
151 இற்கு மேல்	3.50

12-439/4

மினிப்பே பிரதேச சபை

வாகனங்களுக்கும் விலங்குகளுக்குமான வரி விதித்தல் - 2022

மினிப்பே பிரதேச சபை 2021, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நடாத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 05 - 09 ஆம் இலக்க முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

ஏ. எம். எஸ். பி. அபேசிங்ஹ,
தவிசாளர் ,
மினிப்பே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மினிப்பே,
2021 நவெம்பர் 26.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய, 148 ஆவது பிரிவின் 04 ஆவது அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, பின்வரும் அட்டவணையின் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள ஏதும் வாகனங்களையோ அல்லது விலங்குகளையோ 2022 ஆம் வருடத்தில் தமது பெறுப்பில் வைத்திருக்கும் ஒவ்வொருவர் மீதும், அட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள வரியொன்றை 2022 ஆம் வருடத்தில் விதித்து அறவிட மினிப்பே பிரதேச சபை முன்மொழிகின்றது.

அட்டவணை

தொடர் இல.	நிரல் I	நிரல் II
01	ஒவ்வொரு பைசிக்கிள் வண்டிக்கும்	ரூ. 50.00

12- 439/5

மினிப்பே பிரதேச சபை

மினிப்பே பிரதேச சபை அறவிடவேண்டிய விளம்பர அறிவித்தல்கள் /தரிசன சுற்றாடல் துணை விதிகள் மீது வரி விதிப்பது பற்றிய கட்டணத் தீர்மானம்- 2022

